# உடையாளூர் ஸ்ரீராதாகல்யாண வஸந்தோத்ஸவம்
## (பிரதிவருஷம் தை மாஸம் முதல் அல்லது இரண்டாவது ஞாயிற்றுக்கிழமை)

# சென்னையில் உடையாளூர் - ஸ்ரீராதாகல்யாண மஹோத்ஸவம்
## (பிரதிவருஷம் டிஸம்பர் மாஸம் 24 – 25 ஆம் தேதிகள்)

### உடையாளூர் ஒரு பார்வை

பூலோக தக்ஷிண கைலாஸம் என்று அழைக்கப்படும் **உடையாளூர் கிராமம்**, தஞ்சாவூர் ஜில்லா, கும்பகோணம் தாலுக்காவில் கும்பகோணத்திற்கு தெற்கே சுமார் 5 கி.மீ. தூரத்தில் வலங்கைமான் பட்டீஸ்வரம் ஊர்களுக்கு இடையேயும் முடிகொண்டான் ஆறு, குடமுருட்டி ஆறு என்னும் நதிகளுக்கு மத்தியிலும் அமைந்துள்ள மிகவும் அழகான அமைதியான கிராமம் ஆகும். இந்த கிராமத்தின் நாற்புறமும் காவல் தெய்வங்களாக கிழக்கே **ஸ்ரீபால்குளத்தி அம்மன்**, தெற்கே **ஸ்ரீகம்பகாமாக்ஷி அம்மன்**, மேற்கே **ஸ்ரீதிரௌபதி அம்மன்**, வடக்கே **ஸ்ரீசெல்வமஹாகாளி அம்மன்** என்று தனித்தனியே கோவில் கொண்டு அருள்பாலித்து வருகிறார்கள். தவிர கிராமத்தின் கிழக்குபுறமாக **ஸ்ரீகோஷ்டத்வாரவினாயகர்** (கோட்டைவாசல் பிள்ளையார்) கோவிலும், தெற்கில் **ஸ்ரீவண்ணான் பிள்ளையார்** கோவிலும், மேற்கு புறம் **ஸ்ரீகுபேரவினாயகர்** கோவிலும், அதன் வடக்குகோடியில் **ஸ்ரீஉச்சிபிள்ளையார்** கோவிலும் அமையப்பெற்று அருள்பாலித்து வருகின்றனர். கிராமத்தின் ஈசான்ய மூலையில் (வடகிழக்கு) **ஸ்ரீசங்கரபார்வதி அம்பிகாஸமேத ஸ்ரீகைலாசநாதஸ்வாமி** கோவிலும் **(சிவன்கோவில்)** நிருதிமூலையில் (தென்மேற்கு) **ஸ்ரீலக்ஷ்மீநாராயண ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹ பெருமாள்** கோவிலும் அமைந்திருப்பது ஒரு தனி அழகாகும். சிவன்கோவிலுக்கு வடக்குப்புறமாக உள்ள வயல்வெளியின் நடுவில் உள்ள திடலில் பெரிய ஆலமரத்து நிழலில் **ஸ்ரீபூர்ண ஸ்ரீபுஷ்கலாம்பிகா ஸமேத ஸ்ரீ மஹாசாஸ்தா** என்ற **ஸ்ரீஅய்யனார்** கோவிலும் அமைந்திருக்கிறது.

ஸ்ரீபால்குளத்தி அம்மன் கோவில் அருகில் உள்ள புஷ்கரணிக்கு **பால்குளம்** என்றும் (துவாபர யுகத்தில் பால்குளமாக – **க்ஷீரபுஷ்கரணி**யாக இருந்ததாக வரலாறு) **ஸ்ரீஸுப்ரமணிய ஸ்வாமி** தனது வேலாயுதத்தை பிரயோகித்து ஏற்பட்ட குளம் என்பதால் இதற்கு **குமார தீர்த்தம்** என்றும் பெயர் ஏற்பட்டது. குமாரதீர்த்தக் குளத்தின் நடுவில் நீராழி மண்டபத்தில் **ஸ்ரீஸுப்ரமண்ய ஸ்வாமி** வீற்றிருந்து அருள்பாலித்து வருகிறார். அயோத்யாபதியான ஸ்ரீராமபிரானின் பாட்டனார் (ஸ்ரீதசரதசக்ரவர்த்தியின் தகப்பனார்) **ஸ்ரீஅஜமஹாராஜா** வைத்ய சாஸ்திரம் கற்றுத் தேர்ந்தவர். ஒரு சமயம் இவரால் வைத்ய சிகிச்சை அளிக்கப்பட்டு பாதிக்கப்பட்ட ஒருவரின் சாபத்தின் விளைவாக இவர் குஷ்டரோகத்தால் பீடிக்கப்பட்டு மிகுந்த சிரமப்பட்டுக்கொண்டிருக்கும் தருவாயில் ஸ்ரீநாரதமஹரிஷியின் அறிவுரையின் பேரிலும் தெய்வானுக்கிரஹத்தினாலும் இந்த கிராமத்தில் உள்ள குமார தீர்த்ததில் ஸ்நானம் செய்து ஒரு மண்டலம் ஸ்ரீகைலாஸநாதஸ்வாமியை வழிபட்டதன் பேரில் ரோகம் நீங்கப்பெற்று சாபவிமோசனமும் அடைந்ததாக **ஸ்தல வரலாறு** கூறுகிறது. இன்றும் இந்த குளத்தில் ஸ்நானம் செய்து ஒரு மண்டலம் ஸ்ரீகைலாஸநாதஸ்வாமியை வழிபடுபவர்களுக்கு சர்ம வியாதிகள் நீங்கப்பெறுவது நிதர்சனமான உண்மையாகும். இந்த ஊரில் ஸித்தர்களாக இருந்த மகரிஷிகள் **சிவபஞ்சாக்ஷர மந்த்ர ஜபம்** மற்றும் **தபஸ்** செய்து கொண்டு வந்ததால் இவ்வூருக்கு **ஸித்தவனம், பஞ்சாக்ஷரவனம்** என்றும் சோழ சாம்ராஜ்யத்தின் போர்படைகளுக்கு ஆயுதங்கள் தயாரிக்கும் (முக்கியமாக உடைவாள்) பட்டரைகள் நிறைந்து இருந்த காரணத்தால் **உடைவாள் ஊர்** அல்லது **உடைவாளூர்** என்பது காலப்போக்கில் மருவி **உடையாளூர்** என்ற பெயரால் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் **காங்கேயபுரம், சிவபாதசேகரமங்கலம்** என்றும் அழைக்கப்பட்டு வந்தது.

உள்ளூரிலேயே தங்கியிருந்து கைங்கர்யம் செய்து கொண்டு வரும் **பிச்சை குருக்கள்** என்று அனைவராலும் அழைக்கப்படும் **ஸ்ரீ M. வைத்யநாத சிவாச்சாரியார்** அவர்களின் பெருமுயற்சியால் கிராமத்தில் உள்ள சிவன்கோவில், பெருமாள் கோவில், வினாயகர் கோவில்கள் மற்றும் அம்மன் கோவில்கள் என்று அனைத்துக் கோவில்களும் புனருத்தாரணம் செய்யப்பட்டு கருங்கல்லால் சுற்றுச் சுவர் எடுக்கப்பட்டு பன்னிரெண்டு வருஷங்களுக்கு ஒருமுறை விசேஷமாக கும்பாபிஷேக வைபவமும் நடைபெற்று வருவது சிறப்பான செய்தியாகும். ஸ்ரீ சிவாச்சாரியார் அவர்களுக்கு உதவியாக 50 வருடங்களுக்கு முன்பு அந்தக்காலத்தில் **ஸ்ரீ வைதீஸ்வர அய்யர்** கைங்கர்யம் செய்து கொண்டிருந்தார். அவருக்குப் பிறகு அவரது புதல்வர்கள் **ஸ்ரீ V.லெக்ஷ்மணன், ஸ்ரீ V.விஸ்வநாதன்** ஆகிய இருவரும் தன்னலம் கருதாது நெய்வேத்யம் தயாரித்தல், அர்ச்சகருடன் பூஜை சமயம் கூட இருந்து ஒத்தாசைகளை இன்றும் வெகு நேர்த்தியாக சிரத்தையுடன் செய்து கொண்டு வருகிறார்கள்.

### வார்ஷீக உத்ஸவங்கள்

பிரதிவருஷம் பங்குனி மாஸம் முதல் புதன்கிழமை அன்று **ஸ்ரீசெல்வமஹாகாளி அம்மன், ஸ்ரீபால்குளத்தி அம்மன்** மற்றும் **ஸ்ரீஅய்யனார்** ஆகிய தெய்வங்களுக்கு ரக்ஷாபந்தனம் **(காப்புக்கட்டுதல்)** செய்யப்பட்டு அடுத்து வரும் செவ்வாய்கிழமை முதல் மூன்றாவது புதன்கிழமை, மறுநாள் வியாழக்கிழமை வரை 10 நாட்கள் உத்ஸவம் **(திருவிழா)** வெகுவிமர்சையாக வருஷா வருஷம் நடைபெறுகிறது. **மூன்றாவது புதன்கிழமையன்று** அருமையாக ஜோடிக்கப்பட்டு வண்ணவிளக்குகளால் ப்ரகாசிக்கும் கேடகத்தில் இரண்டு அம்பிகையும் வீதி உலா வரும்